www.padippakam.com

# அக்னி கீல தோல்வி இராணுவத்தினை குறைந்தது 4 மாதகாலம் பின்தள்ளியுள்ளது!

(தி ஐலண்ட் எனும் கொழும்பு இனவாத ஆங்கில ஏட்டில் வெளிவந்த இராணுவ ஆய்வுக் கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது)

*கடந்த வாரம் யாழ்.குடாநாட்டில் இரு பிரதான படைப்பிரிவுகளை சிதைவுக்குள்ளாக்கி, அடுத்த 4 மாதகாலத்திற்காவது அனைத்துப் பிரதான இராணுவ நடவடிக்கைகளையும் இடைநிறுத்தியுள்ள அக்னி கீல இராணுவ நடவடிக்கையின் தோல்வி பற்றி ஆராய உத்தியோகபூர்வ விசாரணைகளை சிறீலங்கா இராணுவம் ஆரம்பித்துள்ளது...*

* *சுமார் 12000 இராணுவத்தில் சுமார் 10 வீதமானவர்கள் காயங்களுக்குள்ளாகினர். இது நவீன போர் முறையில் மிகமிக அதிகமான சேதார வீதமாகும்.*

  *53ம், 55ம் படைப்பிரிவுகளில் ஏற்பட்ட பாரிய ஆள்இழப்பு இராணுவத்திற்கு தனது பிரதான வலிந்து தாக்கும் திறனை பறித்துவிட்டது. இவ்விரு படைப்பிரிவுகளும் 1995ல் யாழ் நகரை கைப்பற்றியதிலிருந்து இராணுவத்தின் வலிந்து தாக்கும் சக்தியாக திகழ்ந்த 4 படைபிரிவுகளைச் சேர்ந்தன. 52ம், 54ம் படைப்பிரிவுகளே மற்றைய இரண்டுமாகும். 54வது படைப்பிரிவு கடந்த வருடம் யாழ். போரில் மோசமாக சிதைக்கப்பட்டது....*

* *புலிகள் அறிவித்த 4 மாத போர்நிறுத்தக் காலத்தில் இந்த போரிற்கான ஆயுத்தங்களை இராணுவம் மேற்கொண்டதால் இப்படுதோல்விக்கு வேறுவிளக்கங்கள் கொடுக்க முடியாது. இந்த நடவடிக்கையில் இராணுவத்தின் மிகச்சிறந்த இராணுவ பிரிவுகள் பங்கேற்றன. அவை பீரங்கிகளாலும், பல்குழல் ராக்கட்செலுத்திகளாலும் விமானத் தாக்குதல்களாலும், கடற்படை குண்டுவீச்சுக்களாலும் உதவி பளிக்கப்பட்டன. கடந்த 4 மாத காலம் இராணுவம் தனது பலத்தை அதிகப்படுத்தியது. ஆயுதங்களும், வாகனங்களும் வாங்கப்பெற்றன. விமானப்படை கிபிர் மற்றும் மிக் யுத்த விமானங்களையும், உலங்குவானூர்திகளையும் வாங்கின.*

  *இத் தோல்விக்கான பொறுப்பு வெறுமனே குறித்த கட்டளை தளபதிகளான 55வது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் தென்னக்கோன், 52வது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் சிவலி வனிதசேகரா மற்றும் வடக்கில் இத்திட்டத்தை தீட்டி வழிகாட்டிய யாழ். தளபதி மேஜர் ஜெனரல் விஜேந்திரா போன்றோரிடம் தங்கியிருக்கவில்லை. முப்படைகளின் தளபதிகள் (லெப். ஜெனரல் பலகெல, வைஸ் அட்மிரல் தயா சண்டகிரி, ஏர் மார்சல் ஜெயலத் வீரக்கொடி) தனிப்பட்ட முறையில் பலாலியில் தங்கியிருந்து போரில் ஈடுபட்டனர். கூட்டுப்படை தளபதி லெப்.ஜெனரல் றொகான் தளுவத்தையும் கூட இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.*

*(தி ஐலண்ட் 06.05.2001)*




படிப்பகம்

www.padippakam.com

நடாத்தப்பட்ட பின்னரே இடம்பெற்றது. சில கொல்லப்பட்ட படையினரின் உடல்கள் வியூகங்களுக்குள் மாட்டிக் கொண்டது.

* கிழக்குப் பக்கமாக 4 கிமீ கைப்பற்றி நிலைகொண்ட படையினர் கடும் தாக்கு தலுக்கு இலக்காகினர். இது செவ்வாயன்று தீவிரம் பெற்று மற்றைய இரு நாட் களும் தொடர்ந்தது. வெள்ளியன்று கெரில்லாக்கள் இப்பகுதிகளுக்குள் ஊடுரு வினர். அது தீவிர மோதலை ஏற்படுத்தியது. மீள் நடவடிக்கை தலைமையகத் தில் தீவிர கவலை பரவியது. மேஜர்.ஜெனரல் விஜேந்திரா மீண்டும் கொழும் பிற்கு திரும்பியிருந்த லெப்.ஜெனரல் பலகெலவுடன் தொடர்பு கொண்டார். அவர் கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் றொகான் தளுவத்தவுக்கு நிலை மைகளை விளக்கினார். தேவைப்பட்டால் படைகளை பின்வாங்குமாறு அவர் உத்தரவிட்டார். ....
* எதிரிகளின் நடவடிக்கை அடக்குவதற்கு அப்பாற்பட்டதாக விளங்கியது...
* எனக்கு முன்னே, மர நிழல்களில் அரைஇருளில் பெரியளவிலான வெள்ளை திட்டிகள் நிறைந்து கிடந்தது. அண்மையில் சென்று பார்க்கும் போது அவை கொல்லப்பட்ட படையினரின் உடல்கள் வெள்ளை துணியால் சுற்றிக்கட்டப்பட்டு அடுக்கிவைக்கப்பட்டுள்ளமையை அங்கு காணலாம்...
* ... சிறுது துரத்தில், தூரநோக்கியூடாகப் பார்த்த போது பூநகரியில் உள்ள புலிகளின் நிலைகளை காணமுடிந்தது. அவற்றில் அங்கு காணப்பட்ட கோபுரமே மிக கவனத்திற்குரியதாய் அமைந்தது. அது தொலைத்தொடர்பு கோபுரம் என ஊகிக்கப்படுகின்றது. அவை நாட்டுபுறங்களில் செல்லுலர் தொலைபேசி களுக்காக அமைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களை நினைவுக் குக் கொண்டு வந்தது. புலிகளின் இக் கோபுரங்கள் அவை போன்று உயரமா னவை. மணல்திட்டிகளால் அடையாளம் காணப்படும் கரையோரத்தில் அமைந் துள்ளது. நாங்கள் இனம்காணப்பட்டு பீரங்கி தாக்குதலுக்குள்ளாகலாம் என் கின்ற பயத்தில் நாங்கள் அங்கிருந்து நகர்ந்தோம்....

(தி சண்டே டைம்ஸ் 29.04.01)






படிப்பகம்

www.padippakam.com

# ஏன் 'அக்னி கில' பிழைத்துப் போனது?

(கொழும்பு சண்டே டைம்ஸ் இராணுவ செய்தியாளர் எழுதிய கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது)

*பலாலி விமானப்படைத் தளத்தில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான சீ 130 ரக விமானம் தாள பறக்கத் தொடங்கிய போது சூரியன் மறையத் தொடங்கி இருந்தது. ஓய்வை முடித்துக் கொண்டு சீருடை தரித்த படையினர் மீள போர்முனைக்குச் செல்வதற்காய் விமானத்தில் பயணிக்கின்றனர். நான் மட்டுமே ஒரு விதிவிலக்கு. விமானத்தில் இருந்த ஒரே பத்திரிகையாளன்....*

* *கடந்த வருடம் ஆனையிறவு தோல்வி மற்றும் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற பின்னடைவுகளின் பின்னர் அரசு பல பில்லியன் ரூபாய்களை கொட்டி பாது காப்புப் படைகளை நவீனமயப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டது. எல்லா தேவைப்பட்ட ஆயதங்களும் வந்தடைந்தன. படையினர் 4 மாதங்கள் மீளபயிற்றுவிக்கப்பட்ட னர்....*
* *படையினர் தமது தெற்கு பாதுகாப்புநிலைகளை முறித்துக் கொண்டு காலை 1.48 மணியளவில் முன்னேறத் தொடங்கினர்....*
* *பளையைக் கைப்பற்றுவதே இலக்காக இருந்தது. நடவடிக்கைத் திட்டம் இரு நாட்களுக்கு வகுக்கப்பட்டிருந்தது. ஏப்பிரல் 26ல் இலக்கை அடைய திட்டமிடப் பட்டிருந்தன. பளையைக் கைப்பற்றிய பின்னர் பளையின் இரு புறமும் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்படவிருந்தன. இந்த வலிந்து தாக்குதல் இவ்வருடத்தின் முதலாவது பெரும் நடவடிக்கையாகும். மேலும், ஆனையிறவைக் கைப்பற்று வதற்கான எதிர்கால நடவடிக்கைகளுக்கு இது ஒரு முன்னுதாரணமாகவும் அமையும். வெற்றி அரசாங்கத்தின் தோற்றத்தை பிரகாசிக்க வைத்து, அரசுக்கு ஒரு பலமான பேரம்பேசும் வாய்ப்பை பேச்சுக்களின் போது தரும்....*
* *வல்ந்து தாக்குதல் நடவடிக்கையானது இராணுவத்தின் 55வது படைப்பிரிவு தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தலைமையில் ஏ9 நெடுஞ் சாலைக்கு கிழக்குப் புறமாக நகர்த்தப்பட்டது. மேற்கு பக்கம், இராணுவத்தின் சிறப்பு தேர்ச்சி பெற்ற 53வது படைப்பிரிவினரால் நடத்தப்பட்டது...*
* *கெரில்லாக்கள் இரு நகரும் படைகளையும் மோட்டார்கள், பீரங்கிகள், பல்குழல் றொக்கட்கள் மூலம் தாக்கினர். இருளடையத் தொடங்கும் போது 53வது படைப்பிரினர் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டனர். இராணுவமும், அவர்க ளது வழங்கல்களும் நகரமுடியவில்லை. எதிரிகளின் சூடு தீவிரம் பெற்றது. யாழ்.பாதுகாப்பு படைகளின் நடவடிக்கைத் தலைமையகத்தில் தீவிர கவலை உருவாகியது. பலாலியில் தங்கியிருந்த இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் பலகெலவுடன் கலந்து பேசிய பின்னர் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா படைகளை மீள தமது இடங்களுக்குப் பின்வாங்குமாறு மேஜர் ஜெனரல் சிவிலி வனிகசேகராவிற்கு உத்தரவிட்டார். இந்நடவடிக்கை யானது பல சிறிய சிறிய தாக்குதல்களால் தனிமைப்படுத்தப்பட்ட படைகள் மீது*



படிப்பகம்

